# சொல்லணிகள்

பாகம் 3

கடந்த பேப்பரில் மோனை பற்றிப் பார்த்தோம். இனி எதுகையை பார்ப்போம். எதுகைக்குள் போவதற்கு முன்பு ஒரு விடயத்தை குறிப்பிட விரும்புகிறேன்.

அணிகள் பற்றி தமிழ் இலக்கணம் சொல்வதை விட நான் இங்கே வெகு வெகு குறைவாகவே விடயங்களைத் தந்து வருகிறேன். மிகவும் ஆழமாகச் சென்று ஒவ்வொரு பிரிவுகளையும் விளக்குகின்ற போது, படிப்பவர்கள் அவைகளை உள்வாங்குவதற்கு சிரமப்படக் கூடும் என்று நினைக்கிறேன்.

அவ்வாறு கவிதையில் உள்ள அணிகளின் ஒவ்வொரு நுண்ணிய பிரிவுகளையும் பற்றி எழுத முற்பட்டால், இது வெறும் இலக்கணத் தொடராக மாறி விடும் என்றும் அஞ்சுகிறேன். ஆகவே அணிகள் பற்றி தமிழ் இலக்கணம் தருபவற்றில், முக்கியமானவற்றை மட்டுமே தருகிறேன். தெரிந்தே சில விடயங்களை தவிர்த்துக் கொண்டு செல்கின்ற இந்த தொடரை கற்றவர்கள் பொறுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

இப்பொழுது எதுகையைப் பார்ப்போம். எதுகை மோனை பற்றி தொல்காப்பியர் இப்படிச் சொல்கிறார்.

அடிதொறும் தலை எழுத்து ஒப்பது மோனை

அது ஒழித் தொன்றின் எதுகை ஆகும்

அதாவது முதல் எழுத்து ஒத்ததாக இருப்பது மோனை, முதல் எழுத்து இல்லாது மற்றைய எழுத்துக்கள் ஒன்றி இருந்தால் அது எதுகை ஆகும்.

உங்களுக்கு திரைப்பட இயக்குனர் ரி.ராஜேந்தரை நிச்சயம் தெரிந்திருக்கும். எதுகை மோனையில் வசனங்கள் எழுதுவதில் திறமை உள்ளவர். சேரி மற்றும் வட்டார பேச்சு வழக்குகளில் உள்ள எதுகை மோனைகளையும் திரைக்கு கொண்டு வந்தவர். அவருக்கு ஒரு பக்கம் புகழையும் மறுபக்கம் கடும் கண்டனத்தையும் பெற்றுக் கொடுத்த ஒரு வசனத்தைப் பார்ப்போம்.

‘வாடா என் மச்சி

வாழக்கா பொச்சி

உன் உடம்ப பிச்சி

போடப் போறேன் பச்சி’

இங்கே ‘வாடா’,‘வாழக்கா’ என்று ஒரே எழுத்தில் ஆரம்பிக்கின்ற மோனை வருகிறது. ஆனால் இப்பொழுது ‘மச்சி’, ‘பொச்சி, ‘பிச்சி’,‘பச்சி’ என்ற சொற்களைக் கவனியுங்கள். இந்தச் சொற்களில் முதலாவது எழுத்து ஒன்றாகவோ அல்லது ஒத்ததாகவோ இல்லை. ஆனால் இரண்டாவது எழுத்தும் (ச்) முன்றாவது எழுத்தும் (சி) ஒரே எழுத்தாக இருக்கிறது. இப்படி இரண்டாவது எழுத்தோ அல்லது மற்றைய எழுத்துக்களோ ஒத்ததாக வருவதே எதுகை.

வடிவேலு கதாநாயகனாக நடித்து வெற்றி பெற்ற ‘23ஆம் புலிகேசி’ என்ற திரைப்படத்தில் வடிவேலு படைவீரனுக்கு ஒரு விடுகதை சொல்வார்.

‘தட்டானுக்கு சட்டை போட்டால் குட்டைப் பையன் கட்டையால் அடிப்பான், அது என்ன?’ என்று கேள்வி கேட்பார். பலரும் ரசித்த ஒரு நகைச்சுவைக் காட்சி இது. இதிலே ஒவ்வொரு சொல்லிலும் ‘ட்’ இரண்டாவதாக வருவதைக் கவனியுங்கள். இவையெல்லாம் எதுகைக்குள் அடங்கும்.

மோனையில் உள்ள வசதி இதில் குறைவு என்பதை இங்கே சொல்ல வேண்டும். சொல்லில் வருகின்ற முதல் எழுத்தையோ, அல்லது அதன் மற்றைய வரிசை எழுத்துக்களை உபயோகிக்க முடியும் என்கின்ற பொழுது, பல்லாயிரக் கணக்கான சொற்கள் எமக்கு கிடைக்கும். இது ‘மோனையில்’ உள்ள ஒரு சாதகமான விடயம்.

ஆனால் இரண்டாவதாக வருகின்ற எழுத்து ஒத்ததாக இருக்க வேண்டும் என்று வருகின்ற பொழுது சொற்களை பெறுவது சற்றுக் கடினமானதுதான். அதனாற்தான் என்னவோ ‘ஒரு பேப்பர்கள்’ பலவற்றை புரட்டிப் பார்த்தும் எதுகையோடு அமைந்து ஓரிரு கவிதைகளே என்னுடைய கண்ணில் பட்டது. பெரும்பாலானவர்கள் மோனையிலேயே கவிதை எழுதியிருந்தார்கள்.

## அணிகள் அறிவோம்

அறிவிப்பவர்: **வி.சபேசன்**

ஒரு பேப்பரில் வெளிவந்து என்னுடைய கண்ணில் பட்ட எதுகையோடு அமைந்த சில வரிகளைப் பார்ப்போம். திருமதி யு. ஜெயபாபு என்பவர் எழுதி ‘போதனை’ என்ற தலைப்போடு வெளிவந்த கவிதையில் சில வரிகள்

புலம் பெயர் சிறார்களின் சாதனை

இலம் இனி தமிழுக்கு சோதனை

நலம் இனி நமக்கில்லை வேதனை

பலம் இதே தமிழ்மொழிப் போதனை.

இதிலே புலம், இலம், நலம், பலம் என்றும் சாதனை, சோதனை, வேதனை, போதனை என்றும் எதுகைகள் அமைகின்றன. இப்பொழுது த.சு. மணியம் என்பவர் எழுதிய ‘காலம் சொல்லும்’ என்ற கவிதையில் சில வரிகளை உதாரணத்திற்கு எடுப்போம்

அமிர்தமென வார்த்தைகளை அள்ளி வீசி

அடுத்த கையால் ஆயுதங்கள் அரசுக்கீந்து

நிமிர்ந்துவிடா தமிழர்தலை என்னும் நோக்கில்

நிர்க்கதியாய் நிறுத்திவிட நினைவில் எண்ண

திமிரடக்க புலம் பெயர் வாழ் தமிழரெல்லாம்

புறப்பட்டார் புயலெனவே ஈழம் வெல்ல.

இங்கே அதிகமாக மோனையே இடம் பெறுகின்ற போதிலும் ‘அமிர்தமென’, ‘நிமிர்ந்துவிடா’, ‘திமிரடக்க’ என்று வரிகள் எதுகையாக அமைகின்றன. இந்தச் சொற்களில் இரண்டாவது எழுத்தாக ‘மி’ என்ற ஒரு எழுத்தே அமைந்திருப்பதை கவனியுங்கள்.

ஈழத்திருமகன் என்பவர் எழுதிய ’பயன்’ என்ற கவிதையை இப்பொழுது பார்ப்போம்.

பெற்ற பொழுதினிலே உற்ற பெருவலியும்

இற்றை வரையெனது வெங்குறும்பும் – என்முகங் கண்ட

சொற்ப கணத்தினிலே தான்மறக்கும் என்தாயை

பெற்ற பயனே பயன்

இங்கே ‘பெற்ற’, ‘உற்ற’, ‘இற்றை’, ‘சொற்ப’ என்று எதுகை அமைகின்றது.

இந்த உதாரணங்களோடு எதுகை பற்றி உங்களுக்கு புரிந்திருக்கும் என்று நம்புகிறேன். என்னுடைய பார்வையில் சொற்களை திணிக்காது எதுகையில் கவிதை படைப்பவர்களை தனித்திறமை உள்ளவர்கள் என்பேன்.

இந்த எதுகையில் சில நெகிழ்வுத்தன்மைகளும் இருக்கின்றன. இவைகளையும் மற்றைய சொல்லணிகளையும் அடுத்த பேப்பரில் பார்ப்போம்.

*தொடரும்..*

## ஹிஹிஹி

நபர் 1 : எலிக்கு ஏன் நீளமான வாலிருக்குது

நபர் 2 : தெரியாதே

நபர் 1 : செத்தால் தூக்கி வீசத்தான்


# MARKANDAN & UDDIN SOLICITORS

## Solicitors & Administrators for Oath

M Markandan LLB A Uddin ( Hons ) MA LLB Phd-RFL

Tamil House, 720 Romford Rd, London E12 6BT

**We specialise in ..**
For all your needs in immigration ( All aspects upto house of lords ),
Commercial & Residential Conveyencing, Employment,
Civil Litigation, Consumer Problems, Last will, Power of Attorney,
Spnsorship Declaration, HSMP, Workpermits

MARKANDAN & UDDIN

### விவாக விண்ணப்பம்

**01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்தநாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைப்பின் முன் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும் மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.**

### அகதி விண்ணப்பம்

**14 வருட 10 வருட அல்லது 7 வருட வதிவிடதகமை விண்ணப்பங்கள் பிரஜாவுரிமை விண்ணப்பத்திற்காக ஆங்கில மற்றும் வாழ்க்கை முறை தேர்ச்சி சம்மந்தமான ஆலோசனைகள்**

**விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயமடைந்திருந்தால் நட்ட ஈடு கோருவது சம்பந்தமான விடையங்கள் No win no fee அடிப்படையில்**

Markandan & Uddin Solicitors

**tel 020 8514 8300 / 07830 285 634 | fax 020 8514 8381**
**email info@msssolicitors.com**
**Markandan : 07956 386 576 | Uddin : 07957 455 670**